63
13-4-62

பயிர் வளம்

336

C

GOVERNMENT OF MADRAS
1953

சங்க செய்தித்துறை வெளியீடு

J. 211
N58.
2,20,036.

விலை : 5 காசுகள்.

முன்னுரை

உணவு உயிர் போன்றது. மக்கள் அனை வருக்கும் வயிறார உணவு கிடைக்க வகை செய்வது மிக முக்கியமான பணி. உணவுப் பொருள்களின் குறைபாட்டை நீக்கித் தன்னிறைவு கான சென்னை அரசாங்கம் சென்ற 10 ஆண்டுகளாகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பொது மக்களும் நல்ல முறையில் ஒத்துழைத்தார்கள். அதனால் விளைந்த பயன்கள் இங்கு விளக்கப் படுகின்றன. இதிலுள்ள புள்ளி விவரங்கள் அரசாங்க வேளாண்மைத் துறை காரியதரிசி, ஸ்ரீ பி. பி. ஐ. வைத்திபாதன், ஐ.சி.எஸ்., அவர்களுடைய சென்னை மாநிலத்தில் "உணவுப் பொருள் உற்பத்தி வேலைத் திட்டங்களின் அளவெடுப்பு" என்னும் வெளியீட்டிலிருந்து எடுக்கப் பெற்றவை யாகும்.

நெறியாளர்,
சென்னை அரசாங்க செய்திந்துறை.

J.211
N58



பயிர் வளம்

உணவில் சுயதேவைப் பூர்த்தியைப் பொறுத்தே ஒரு நாட்டின் சுபிட்சம் இருக்கிறது. சென்னை மாநிலத்தின் உணவுப் பொருள் உற்பத்தி நிலைமைபற்றி ஆந்திர முதலமைச்சர் ஸ்ரீ என். சஞ்சீவ ரெட்டி அண்மையில் குறிப்பிட்டார்: "இந்தியாவில் உபரியாக உணவு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஆந்திராவும், சென்னை மாநிலமும் முதல் ஸ்தானம் வகிக்கின்றன" என்று அவர் எடுத்துக் காட்டினார்.

உணவுப் பொருளில் பற்றாக்குறை நிலைமையை நீக்கி, சுயதேவைப் பூர்த்தியும், உபரி உற்பத்தியும் காண, மக்கள் அரசாங்கம் சென்ற 10 ஆண்டுகளில் பல முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வேளாண்மைத் துறையில் பல்வேறு பிரிவுகளில், குறிப்பாக உணவு உற்பத்தி வகையில் 10 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையும், பத்து ஆண்டுக் காலத்தில் எற்பட்ட முன்னேற்றமும் இங்கு தரப்படுகிறது.

1949–50-ல் அதாவது முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடித்தளமாக இருந்த ஆண்டில், தற்போதைய சென்னை மாநிலப் பிரதேசமாக அமைந்த பகுதிகளில் உற்பத்தியான தானியம் 30·47 லட்சம் டன்கள். 1955–56-ல் அதாவது திட்டத்தின் கடைசி ஆண்டில் இந்த உற்பத்தி 44·21 லட்சம் டன்களாக உயர்ந்தது. அதாவது உற்பத்தி 13·47 லட்சம் டன்கள் அதிகரித்தது.

1949–50-ல் மாநிலத்தில் உணவுப் பொருள்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 96·23 லட்சம் ஏக்கர். 1955–56-ல் உணவு தானிய வின் நிலப்பரப்பு 109·84 லட்சம் ஏக்கராக அதிகரித்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 2 ஆண்டுகள் கழிந்த பின்பு அதாவது 1957–58-ல் தானிய உற்பத்தி 46·58 லட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. உணவுப் பயிர் விளை நிலப்பரப்பு 111·80 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.

அரிசி.—1949–50-ல் சென்னை மாநிலப் பகுதியில் மொத்தம் 47·69 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது. அப்போதைய விளைச்சல் 17·91 லட்சம் டன் அரிசி. 1955–56-ல் நெல் விளையும் நிலப்பரப்பு 54·56 லட்சம் ஏக்கராக அதிகரித்தது; அரிசி உற்பத்தி 29·55 லட்சம் டன்களாக அதிகரித்தது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்

1957–58-ல் நெல் பயிராகும் பரப்பளவு 56·05 லட்சம் எக்கராகவும், அரிசி உற்பத்தி 31·34 லட்சம் டன்களாகவும் அதிகரித்துள்ளன.

குறிப்பு.—நல்ல மழை இருக்கும் ஆண்டைவிட, மழை குறைந்த வருஷத்தில் உணவு உற்பத்தி சுமார் 10 லட்சம் டன் குறையும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சிறு தானிய வீதம் நிலங்கள் பல, நெல் பயிரிடுவதற்கு மாறிவிட்ட தாலும், சிறுதானிய சாகுபடி திருந்திய விவசாய முறைக்கு வசதியாக இல்லாததாலும், சிறு தானிய உற்பத்தி, நெல்லின் அளவுக்கு கணிசமாக அதிகரிக்கவில்லை.

உணவுத் தேவை

நபர் ஒன்றுக்கு நாளுக்கு 15·3 அவுன்ஸ் தேவை எனக் கொண்டால் நமது மாநிலத்தின் மொத்த உணவுத் தேவை சுமார் 43 லட்சம் டன்கள். 1957–58-ல் நமது உற்பத்தி 46·58 லட்சம் டன்கள். அதாவது நல்ல மகசூல் இருக்கும் போது ஏற்றுமதி செய்வதற்காக உபரியாக உணவுப் பொருள்களும் ஓரளவு இருக்கும். மழை மோசம் செய்து விட்டால் உற்பத்தி சுமார் 10 லட்சம் டன் குறைந்து இந்த மாநிலத்துக்கு சுமார் 8 லட்சம் டன் பற்றுக்குறை ஏற்படும். மழை தவறிவிடும் ஆண்டிலும் நமது மாநிலம் தன்னிறைவு உள்ளதாக ஆவதற்கு தற்போதைய அளவுக்குமேல் 8 லட்சம் டன் கூடுதலாக உற்பத்தியாகவேண்டும்.

ஜனத்தொகை அதிகரித்து வருவதற்கேற்ப, தற்போதைய உணவு உபயோகிப்பு அளவை நிலைநிறுத்துவதற்கே கூட 1·38 சதவிகிதம் வீதம் உற்பத்தி அதிகரித்து வந்தாக வேண்டும்.

2-வது திட்ட லட்சியம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால அடிப்படை ஆண்டில் அதாவது 1955–56-ல் அரிசி, சிறு தானியங்கள் உள்ளிட்ட மொத்த தானிய உற்பத்தி 4 1·21 லட்சம் டன்கள். இரண்டாம் திட்ட காலத்தில் உற்பத்தியை 12·79 லட்சம் டன் அதிகரிக்கவேண்டும் என்பது லட்சிய அளவாகக் கொள்ளப் பட்டுள்ளது. அதாவது 29 சதவிகித அபிவிருத்தி காண உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதே போல எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 8·28 லட்சம் டன்களாக இருப்பதில் 21 சதவிகித அபிவிருத்தி காணவேண்டும் என்றும், கரும்பு

எரிவும் நன்றும் எருவிடுதல் (கம்போஸ்ட் உர தயாரிப்பு)

உற்பத்தி 29·00 லட்சம் டன்களாக இருப்பதில் 34 சதவிகித அபிவிருத்தி காணவேண்டும் என்றும், பருத்தி உற்பத்தி 2·71 லட்சம் பேல்களாக இருப்பதை 3·71 லட்சம் பேல்களாக, 48 சதவிகிதம் உயர்த்த வேண்டும் என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முடிவான லட்சிய அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நடைபெற்ற வேலைகள்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விசேஷ சிறிய பாசனத் திட்டங்கள் என்னும் தலைப்பில் 2,687 வேலைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று லட்சிய அளவு வரையறுக்கப் பட்டிருந்தது. அதில் 2,458 திட்டங்கள் நிறைவேறின.

தவணை முறையில் விலை பெற்று விற்பதற்கான திட்டத்தின் கீழ் மொத்தம் 6,441 ஆயில் இஞ்சின்கள், மின்சார பம்ப் செட்டுகளை வழங்க திட்டமிடப்பட்டது. இதில் மொத்தம் 2,456 செட்டுகள் வழங்கப்பட்டன.

முதல் திட்ட காலத்தில் 2,450 வடிமுனைக் கிணறுகளை அமைப்பதென்பது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டது. லட்சிய அளவுக்கும் மேலாக மொத்தம் 2,671 வடிமுனைக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

முதல் திட்ட காலத்தில் மொத்தம் 159 டிராக்டர்கள் வாடகைக்கு விடப்பட்டன.

டிராக்டர்கள் மூலம் 2·16 லட்சம் ஏக்கர் நிலங்களில் கரைகள் அமைக்கவும், சரிவுகளை எடுத்துக் கட்டவும் திட்டமிடப் பட்டது. இதில் 1·86 லட்சம் ஏக்கரில் இந்த வேலை செய்து முடிக்கப்பட்டது.

2,20,036.

நட்டபின்.....(ஜப்பானிய முறையில்)

தவணை முறையில் விலை கொடுத்து வாங்கச் செய்வதற் கென 123 டிராகடர்களை வழங்க முதல் திட்டகாலத்தில் திட்ட மிடப்பட்டது. மொத்தம் 121 டிராகடர்கள் வழங்கப்பட்டன.

ஒரு லட்சம் டன் அமோனியம் சல்பேட் வழங்க திட்டமிடப் பட்டது. அதில் 0·93 லட்சம் டன்கள் வழங்கப்பட்டன.

நகர்புற குப்பை உரம் (கம்போஸ்ட்) 3·16 லட்சம் டன் தயாரிப்பது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டது. 2·50 லட்சம் டன் தயாரிக்கப்பட்டது.

தழை உர விதைகள்

தழை உர விதைகள் 500 டன் வழங்கப்பட்டன. அதில் மொத்தம் லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டிருந்தது 400 டனகள் ஆகும். மொத்தம் 38·000 லட்சம் ஏக்கருக்கு பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

நீரினும் நன்று அதன் காப்பு (மருந்தடித்து பயிர் பாதுகாத்தல்)

இரண்டாவது திட்ட காலத் துவக்கத்தில் உணவுப் பயிர்களுக்காக உபயோகிக்கப்பட்ட அம்மோனியம் சல்பேட்டின் அளவு 85,000 டன்கள். கடன் வசதிகள் முதலியன செய்து கொடுக்க முடியுமானால் 2-வது திட்ட கால முடிவில் இந்த லட்சிய அளவு 2·25 லட்சம் டன்னாக உயர முடியும் என்று கருதப்பட்டது. ஆனால் பின்பு அயல் நாட்டு நாணய வசதி சங்கடங்கள் குறுக்கிட்டன.

திட்ட காலத் துவக்கத்தில் நெல் பயிர்பரப்பில் சுமார் 50 சத விகிதத்தில் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டாவது திட்ட முடிவில் இதை 85 சதவிகிதத்துக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுதானிய விளை நிலங்களில் 10 சதவிகிதப் பரப்பில் மட்டுமே பொறுக்கு வித்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதை சுமார் 30 சதவிகிதமாக உயர்த்துவது சாத்தியமாக இருக்கும்.

இரண்டாவது திட்ட காலத்தில் 1956-57-ல் உணவு உற்பத்தி 2·01 லட்சம் டன்கள் அதிகரித்தது. 1957–58-ல் கூடுதல் உற்பத்தி 0·32 லட்சம் டன்கள்.

ஆண்டுக்கு ரூ. 60 லட்சம்

சிறிய பாசன வேலைகளுக்கு ஆண்டுதோறும் ரூ. 60 லட்சம் முதலீடு செய்யப்படுகிறது. குறிப்பாக சென்ற 9 ஆண்டுகளில் மட்டும் சுமார் 3,713 ஏரி குளங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இதற்கு செலவான தொகை ரூ. 462 லட்சம். இனியும் பழுது பார்க்கவேண்டிய ஏரி குளங்கள் சுமார் 6,630 ஆகும். இதற்கு சுமார் ரூ. 8 கோடி செலவாகும்.

தற்போது அரசாங்கத்தின் வசம் 142 டிராக்டர்கள் உள்ளன. நிலங்களை பண்படுத்த அவை வாடகைக்கு விடப் படுகின்றன. உழுவதற்கு கட்டணம் ஏக்கருக்கு 12 ரூபாய்.

களை மரங்களிலும் பூச்சிகளை ஒழிக்க மருந்து அடிக்கப்படுகிறது

முதலாவது திட்ட காலத்தில் ஆண்டுதோறும் சுமார் 24,000 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன.

இரண்டாவது திட்டத்தில் ஆண்டுக்கு மொத்தம் 32,500 ஏக்கரை மீட்டுப் பண்படுத்துவது லட்சிய அளவாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. 1956-57-ல் 24,440 ஏக்கர் நிலம் மீட்கப் பட்டது. 1957-58-ல், 1958 பிப்ரவரி வரை 17,847 ஏக்கர் மீட்கப்பட்டது. ஒரு டிராக்டரை பராமரிப்பதில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,000 நஷ்டம் ஏற்படுகிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 25 லட்சம் செலவில் 125 டிராக்டர்களை வாங்கிக் குடியானவர்களுக்கு தவணை முறையில் விற்பதென லட்சிய அளவு வரையறுக்கப் பட்டது. 1956-57-ல் ரூ. 4·00 லட்சம் செலவில் 25 டிராக் டர்கள் வாங்கப்பட்டன. 1958-59-ல் ரூ. 10 லட்சம் செலவில் 50 டிராக்டர்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மின்சார மோட்டார் உற்பத்தி

மண்வளப் பாதுகாப்பு

முதல் திட்ட காலத்தில் மொத்தம் 72,767 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலை மேற்கொள்வதென லட்சிய அளவு வரையறுக்கப்பட்டது. அதில் 15,756 ஏக்கரில் வேலை நடைபெற்றது.

இரண்டாவது திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு ரூ. 100·20 லட்சம் ஒதுக்கப்பட்டது. வேலை நடைபெறுவதற்கு குறிப்பிடப்பட்ட லட்சிய அளவு 62,810 ஏக்கர். 1956–57-ல் 34,710 ஏக்கரில் வேலை நடைபெற்றது.

பொறுக்கு விதைகள்

பொறுக்கு விதைகள் சம்பந்தமாக நெல்லுக்காக தற்போது சுமார் 22, 00 கிராம விதைப் பண்ணைகள் இருக்கின்றன. சிறு தானியங்களுக்காக 12,000 விதைப் பண்ணைகள் உள்ளன.

இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் 360 அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டது. 1956–57-ல் 38 பண்ணைகள் துவக்கப்பட்டு, அவைகளில் 10 பண்ணைகள் தகுதியற்றவை என்ற காரணத்தால் மூடப்பட்டன. 1957–58-ல் 126 பண்ணைகள் துவக்கப்பட்டன. அரசாங்க விதைப் பண்ணைகளை துவக்குவதற்கு வசதியாக விசேஷ சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

ரசாயன உரங்கள்

1951–52-ல் கிராம குப்பை உர திட்டத்தின்கீழ் 79,781 டன் உரம் வழங்கப்பட்டது. 1955–56-ல் இது 170,857 டன்களாக உயர்ந்தது. 1956–57-ல் வழங்கப்பட்ட கிராம குப்பை உர அளவு 173,411 டன்கள் ஆகும்.

தற்போது மதுரை, சென்னை ஆகிய நகராட்சிகள் உரத்துக்காக கழிவு நீரைப் பயன்படுத்துகின்றன.



தழை உரம்

1953–54-ல் 111 டன் தழை உர விதைகள் வழங்கப்பட்டன. 1956–57-ல் இது 599 டன்களாக உயர்ந்தது.

S.211
V56



தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய

முதல் திட்ட கால முடிவில் சுமார் 12 லட்சம் எக்கரில் பசுந்தழை உரம் பயன்படுத்தப்பட்டது. 2-வது திட்ட காலத்தில் 39·1 லட்சம் எக்கரில் தழை உரம் பயன்படுத்த வேண்டும் என்பது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஜப்பானிய சாகுபடி முறை

ஜப்பானிய சாகுபடி முறை 1953-லேயே சென்னை மாநிலத்தில் அமுலாக்கப்பட்டது. 1954-ல் சிறுதானியங்கள், பருத்தி ஆகிய வைகளிலும் அந்த முறை அனுசரிக்கப்பட்டது. 1956-57-ல் இந்த மாநிலத்தில் மொத்தம் 6·93 லட்சம் எக்கர் ஜப்பானிய சாகுபடி முறையின் கீழ் வந்தது. 2-வது திட்ட கால முடிவில் சுமார் 47·45 லட்சம் எக்கரை ஜப்பானிய சாகுபடி முறையின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

அறுவடை செய்யும் யந்திரம்

விளைச்சல் போட்டி

விளைச்சலைப் பெருக்குவதில் ஊக்க மளிக்க, இந்த மாநிலத்தில் 1950-51-ல் மாநில அளவில் விளைச்சல் போட்டி ஆரம்பமாயிற்று. நெல், சோளம், கம்பு, உருளைக் கிழங்கு ஆகியவைகளுக்கு பிர்க்கா, வட்டம், மாவட்டம், பிராந்தியம், மாநில வாரியாக போட்டி நடத்தப் பட்டு, பரிசு வழங்கப்படுகிறது. சமுதாய நல அபிவிருத்தி பகுதிகளில் கிராம அளவிலும் போட்டிகள் நடத்தப்படு கினறன. 1950-51-ல் விளைச்சல் போட்டியில் மொத்தம் 5,680 விவசாயிகள் பங்குகொண்டனர். 1955-56-ல் போட்டியில் பங்கு கொண்ட விவசாயிகள் 17,291 பேர். உணவுப் பயிர் தவிர்த்து கரும்பு, நிலக்கடலை, முந்திரி ஆகியவைகளிலும் விளைச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

முற்போக்கான விவசாயிகளிடையே இந்தப் போட்டித் திட்டம் மிகவும் பிரபலமடைந்திருக்கிறது.

Govt. Press, Madras